# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2092/63 - 2018 ඔක්තෝබර් මස 12 වැනි සිකුරාදා - 2018.10.12

*2092/63 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: விய/3/1/3/01/2017.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியினை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்திலுள்ள, பியகம பிரதேச செயலாளர் பிரிவில், மாகொல கிராமத்தில் அமைந்துள்ள, சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பிரதான நில வரைபடத்திலுள்ள மு.பி 4101 மற்றும் 2018.08.13 ஆந்திகதிய முதற் சுவட்டு வரைபடத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்ட சுமார் 0.0354 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம் பின்வருமாறு :

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர் : திவுல்கஹவத்தை; விபரம் : வீட்டுத்தோட்டம், தற்காலிகக் கட்டிடம், தண்ணீர்த் தாங்கி, கிணற்றுடன் எல்லாம் சேர்ந்த தோட்டம் உண்டு; உரிமை கோருபவர் : டி. ஐ. விக்ரமரத்ன, இல. 203/4, மாகொல தெற்கு, மாகொல; விஸ்தீரணம்: 0.0354 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பியகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். ஏ. ஷந்திமா சூரியஆராச்சி,
பிரதேச செயலாளர்,
பியகம.

பிரதேச செயலகம்,
பியகம,
சபுகஸ்கந்த,
மாகொல,
2018, ஒற்றோபர் 10.

10 - 1441